# திருப்பத்தூர் நகராட்சி

2020 - ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 - ம் நாள் திங்கட்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்
திருப்பத்தூர்
நாள். 06.01.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

**பொருட்கள்**

**01)** வேலூர் மண்டலம் நகராட்சியின் நிர்வாக இயக்குநர் அவர்களின் **04.01.2020–ம்** தேதிய தொலைப்பேசி தகவலின் படி இந்நகராட்சிக்கு **14**th CFC Grant –ன் படி ரூ. **233.91** இலட்சத்திற்கு சாலை பணிகளை தேர்வு செய்து உரிய பிரேரணை தயார் செய்து மன்றத்தின் அனுமதி பெற்று கடிதம் அனுப்ப கோரப்பட்டது. அதன் அடிப்படையில் **14**th CFC Grant –ன் சாலை பணியின் விவரம்

| வ.எ | வார்டு எண் | தெருவின் பெயர் மற்றும் பணியின் விவரம் | நீளம் (மீட்டரில்) | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 5 | பொன்னியம்மன் கோயில் தெரு தார் சாலை அமைத்தல் | 250.00 | 25.00 |
| 2 | 8 | வைத்தியர் சென்ன மூர்த்தி ரெு (VCM Street) தார் சாலை அமைத்தல் | 250.00 | 25.00 |
| 3 | 2 | சக்தி நகர் 1வது தெரு முதல் 5வது தெரு வரை தார் சாலை அமைத்தல் | 550.00 | 25.00 |
| 4 | 14 | தர்மராஜா கோயில் 1–வது தெரு தார் சாலை அமைத்தல் | 250.00 | 15.00 |
| 5 | 20 | குமாரசாமி கோயில் தெரு தார் சாலை அமைத்தல் | 250.00 | 20.00 |
| 6 | 29 | ஆறுமுகனார் தெரு தார் சாலை அமைத்தல் | 625.00 | 25.00 |
| 7 | 32 | பா.உ.சா நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் பணி | 625.00 | 25.00 |
| 8 | 25 | வடக்கு முத்தப்பர் தெரு, சாமி தெரு, அனுமுதின் தெரு தார் சாலை அமைத்தல் | 600.00 | 25.00 |
| 9 | 28 | பெரியார் நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் பணி | 450.00 | 20.00 |
| 10 | 26 | காந்தி நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் பணி | 200.00 | 12.00 |
| 11 | 34 | சுந்தரம் நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் பணி | 300.00 | 18.00 |
| | | மொத்தம் | 4350.00 | 235.00 |

மேலும் இத்திட்டத்தில் தொகை ரூ.233.91 இலட்சம் திட்ட மதிப்பீடு தொகையாகவும் எனவும் மீதமுள்ள தொகை நகராட்சி பொது நிதி 2019–2020–ல் ஈடு செய்து கொள்ளவும் உரிய பிரேரணை தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவவக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2414/2020/இ1

**02)** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை மரபு வழி கழிவுகளை தாது பொருட்களாக (Blio Mining ) மாற்றும் பணி தொகை ரூ. 953.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து M/S Excel Engineering Enterprises, Jolarpettai என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். (வழக்கு எண் W.M.P. No 21643/2019) இவ்வழக்கின் தற்போதைய நிலவிரப்படி Dismissed as withdrawn என கடிதம் வரப்பெற்றது. இவ்வழக்கில் நகராட்சி சார்பில் திரு. சீனிவாஸ் வழக்கறிஞர், சென்னை என்பவர் வாதிட்டமைக்காக வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ.15000/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. மேற்கண்டுள்ள தொகையினை நகராட்சி பொது நிதி 2019–2020 –ல் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 710/2018/இ1

# திருப்பத்தூர் நகராட்சி

2020 - ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 - ம் நாள் வியாழக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்<br>திருப்பத்தூர்<br>நாள். 23.01.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,<br>திருப்பத்தூர் நகராட்சி.

**பொருட்கள்**

**03)** தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு எல்லைகளை மறுவரையறை செய்ய தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட வார்டு எல்லை மறுவரையறை ஆணையத்தின் உத்திரவு எண். DC.ORDER NO. 1/2017/TNDC/EG-1 நாள் 12.09.2017–ல் வார்டு எல்லைகளை மறுவரையறை செய்வதற்கான விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வார்டு எல்லைகளை 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் நிலையில் உள்ள குடியிருப்புகளின் அடிப்படையில் மறுவரையறை செய்ய வரைவு வார்டு எல்லை மறுவரையறை கருத்துரு மாவட்ட எல்லை மறுவரையறை அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வழிமுறையாக சமர்ப்பிக்க மேற்படி ஆணைய கடிதம் ந.க.எண். 3174/2017/EG-1 நாள் 05.10.2017 (ம) 13.12.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.575/2020/தேர்தல் நாள்.21.01.2020–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

## அலுவலக குறிப்பு

வார்டு எல்லைகளை மறுவரையறை செய்வதற்கான விதிமுறைகளின் படி இந்நகராட்சியின் இயற்கை அமைப்பிற்கேற்பவும், தெருக்களின் இயல்பான அமைப்பிற்கேற்பவும் வார்டு எல்லைகள் மறுவரையறை செய்ய வரைவு கருத்துரு தயாரிக்கப்பட்டு அதனை உரிய வழிமுறையாக ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழஙகலாம்.

**ந.க.எண். 3253/2017/எப்1**

# திருப்பத்தூர் நகராட்சி

2020 - ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 - ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம் — தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் — திருப்பத்தூர் நகராட்சி.
நாள். 31.01.2020

**பொருட்கள்**

**04)** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் அலுவலகத்தில் காணொளி காட்சி கட்டமைப்பு (Video Conference Infrastructure) கூட்ட அரங்கு கட்டமைப்பு (Meeting hall Infrastructure) அமைப்பு மற்றும் மின்சார வசதி என அனைத்து பணிகளுக்கும் மதிப்பீடு தொகை ரூ.46.50 இலட்சம் என உத்தேசிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் Roc No.1391/2019/WB நாள்.03.10.2019 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4494/2019/ஆ2, நாள்.23.10.2019 ஆகிய கடிதங்கள் வரப்பெற்று இதில் தேர்வு நிலை நகராட்சிக்கு 8% சதவீதம் பங்கு தொகை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியின் பங்கு தொகை (46.50x8%=3,72,000) ரூ.3,72,000/-யை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட தொகையை நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0082/2020/இ1)

**05)** இந்நகராட்சியில் 14th CFC 2019–2020–ம் நிதியாண்டின் கீழ் மதிப்பீடு தொகை ரூ.235.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணிக்கு 30.01.2020–ம் தேதி மாலை 3.30 மணிக்கு PRICE BID திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் 11 எண்ணம் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி (அதாவது மதிப்பீட்டினை விட 5.12% அதிகம்) கொடுத்த திரு. எஸ். குணசேகரன் என்பவர் விலை குறைப்பு (NEGOTIATION) கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. அதனை ஏற்று ஒப்பந்ததாரர் திரு. எஸ். குணசேகரன் என்பவர் கீழ்கண்டுள்ள படி ஒப்பந்தப்புள்ளியில் விலை குறைப்பு கொடுத்துள்ளார் அதன் விவரம் பின்வருமாறு,

| S.N | NAME OF THE WORK | CONTRACTER NAME | CONTRACTER TENDER PERCENTAGE |
|---|---|---|---|
| 1 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO PONNIAMMAN KOVIL STREET WARD NO 05 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 2 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO VCM STREET WARD NO 08 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 3 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO SAKTHI NAGAR 1 TO 5 STREET WARD NO 02 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 4 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO DHARMA RAJA KOVIL 1ST STREET WARD NO14 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 5 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO KUMARA SAMI KOVIL STREET WARD NO 20 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 6 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO ARUMUGANAR STREET WARD NO 29 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 7 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO PA.VU.SA NAGAR WARD NO 32 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 8 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO NORTH MUTHAPPAR STREET SAMI STREET AMINUTHIN STREET WARD NO 25 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 9 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO PERIYAR NAGAR WARD NO 28 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 10 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO GANDHI NAGAR WARD NO 26 | S. GUNASEKARAN | 4.80% Above |
| 11 | PROVIDING BLACK TOP SURFACE ROAD TO SUNDARAM NAGAR WARD NO 34 | S. GUNASEKARAN | 4.80% Above |

மேற்கண்டுள்ள சிப்பம் எண் 1 முதல் 11 வரையிலான பணிகள் அனைத்திற்கும் 4.80% மதிப்பீட்டினை விட கூடுதல் சதவீதம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளியினை தற்பொழுது உள்ள கட்டுமான பொருட்களின் விலை விகிதம் வெளிச்சந்தையில் கூடுதலாக உள்ளதால் இதற்கு மேல் குறைத்து கொடுக்க இயலாது என ஒப்பந்ததாரர் கடிதம் கொடுத்துள்ளார். எனவே

மேற்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டிய 2% வைப்புத் தொகையில் ஒப்பந்தப்புள்ளி அன்று 1% சதவீதம் செலுத்தியது போக மீதமுள்ள 1% சதவீதம் வைப்புத் தொகையினை செலுத்திய பின்னர் திரு.எஸ். குணசேகரன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான வைப்புத் தொகை1% சதவீதம் ஒப்பந்ததாரர் செலுத்திய பின்னர் பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்2414/2019/இ1

**06)** திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி இரண்டு ஓட்டுநர்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மன்ற அனுமதி பெற்று ஒப்பந்த அடிப்படையில் நியமித்து கொள்ளவும் அவ்வாறு நியமனம் செய்யப்படும் ஓட்டுநர்களுக்கு மாவட்ட ஆட்சி தலைவரால் நிர்ணயிக்கப்படும் தினக்கூலியின் அடிப்படையில் நிர்ணயித்து ஒப்பந்த காலம் முடிந்தவுடன் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்ற நிபந்தனையுடன் பணி ஆணை வழங்க வேண்டும் என்ற இணை இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை, அவர்கள் கடிதம் ந.க.எண் 21960/2002/ஜே3 நாள் 31.10.2002–ல் தெரிவித்துள்ளதற்கிணங்க நகர மன்ற அனுமதி தீர்மானம் எண் 107 நாள் 18.10.2019–ன் படி 1.11.2019 முதல் 31.01.2020 வரை ஒப்பந்த ஓட்டுநர்கள் இரண்டு நபர்களை தினக்கூலி அடிப்படையில் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி 1.02.2020 முதல் 30.04.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி காலத்தை நீட்டிப்பு செய்தும் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்படும் தினக்கூலி ஊதியத்தை வழங்கவும் அதற்கான தோராய செலவீனம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பணிக்கான எந்த உரிமையும் கோரமாட்டேன் என்ற உறுதி மொழி படிவம் பெற்று நீடிப்பு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி நிபந்தனையுடன் பணி நீட்டிப்பு வழங்கவும் ஒப்பந்த ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2185/2005/எச்1

**07)** சட்டமன்ற உறுப்பினர் நிதி 2019–2020–ம் நிதியாண்டின் கீழ் பணிகள் செய்ய 28.01.2019–ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிடியடன ஒப்பு நோக்கு பட்டியல் விவரம்

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ இலட்சம் | ஒப்பந்ததாரர் பெயர் | வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி வார்டு எண்.32 வெங்கடேஷ்வரா நகரில் குடிநீர் விநியோகம் செய்ய 110 mm Pvc பைப் லைன் அமைத்தல் பணி | 1.50 இலட்சம் | 1. A.C.சுரேஷ்குமார்<br>2. N.பூபதி | 1. 0.13% மதிப்பீட்டை விட குறைவு<br>2. 1.01% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண் 35 சிவசக்தி நகரில் குடிநீர் விநியோகம் செய்ய 90mm Pvc பைப்லைன் அமைத்தல் பணி | 2.50 | 1. A.C.சுரேஷ்குமார்<br>2. N.பூபதி | 1. 0.15% மதிப்பீட்டை விட குறைவு<br>2. 0.97% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளிலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எ.சி.சுரேஷ்குமார் என்பவருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த ஒப்ந்த புள்ளி வழங்கி ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1976/2019/இ1

08) இந்நகராட்சியில் SWM – SBM 10th SHPC 2019–2020–ம் நிதியாண்டின் கீழ் தொகை ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் பா.உ.சா. நகர் குப்பை கிடங்கு பகுதியில் Construction of Resource Recovery Centre (RRC) No1-1 பணி செய்ய 30.01.2020–ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1 | திரு.K.சேகர் | –11.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.K.மூர்த்தி | 0.05% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | திரு.S.குணசேகரன் | 7.77% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | திரு.S.ராஜேந்திரன் | 6.35% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | திரு.S.துர்கா | 3.24% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டுள்ள வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள திரு.K.சேகர், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த ஒப்ந்த புள்ளி வழங்கி ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2273/2019/இ1

09) இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நகராட்சியின் மூலம் வழங்கப்படும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கான சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணம் வருட வருடம் உயர்வு செய்திடும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை –5 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.748/08/குவ2 நாள்.21.09.2009–ல் தெரிவித்துள்ளபடி கட்டண உயர்வு கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**I. சாலை சீரமைப்பு கட்டணம் –5% சதவீதம்**

| சாலையின் நீளம் | சாலையின் தன்மை | 2020–2021–ம் ஆண்டிற்கு |
|---|---|---|

| | | உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|
| 0 முதல் 30 மீட்டர் வரை | கருங்கல் சாலை | 1796.00 |
| | தார்சாலை | 3854.00 |
| | சிமெண்ட் சாலை | 4452.00 |
| 31 முதல் 90 மீட்டர் வரை | கருங்கல் சாலை | 2825.00 |
| | தார்சாலை | 4883.00 |
| | சிமெண்ட் சாலை | 5481.00 |

**II. மேற்பார்வை கட்டணம் –20% சதவீதம்**

| சாலையின் நீளம் | சாலையின் தன்மை | 2020–2021–ம் ஆண்டிற்கு உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|
| 0 முதல் 30 மீட்டர் வரை | கருங்கல் சாலை | 2880.00 |
| | தார்சாலை | 3456.00 |
| | சிமெண்ட் சாலை | 3600.00 |
| 31 முதல் 90 மீட்டர் வரை | கருங்கல் சாலை | 3024.00 |
| | தார்சாலை | 3672.00 |
| | சிமெண்ட் சாலை | 3816.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டுள்ள தொகையை நிர்ணயம் செய்து வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.8313/99/இ2